# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP. No. 137/2013 Date: 25.11.2022**

பெயர் - நாகராஜ் - (**PW**1)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :( சத்தியபிரமாணத்தின் பேரில்)

என் தந்தை நாரப்பான்சாவடி பேருந்து நிறுத்தம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையை கடக்கும் போது தான் விபத்து நடந்தது என்றால், சாலையை கடந்து மண் ரோட்டிற்கு வந்துவிட்டார். அப்போது தான் விபத்து நடந்தது. என் தந்தை சாலையை கடக்கும் போதுதான் விபத்து நடந்தது எனவும், எனவே இந்த விபத்திற்கு என் தகப்பனரே காரணம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சமயத்தில் என் தந்தை கே.எஸ்.ஆர் பள்ளி பேருந்தில் 10 வருடங்களாக டிரைவராக வேலை பார்த்தார். மாதம் ரூ.10000 க்கு மேல் சம்பளம் வாங்கி வந்தார். என் தந்தை கே.எஸ்.ஆர் பள்ளியில் வேலை பார்த்தற்கும், மாதம் ரூ.10000 சம்பளம் வாங்கியதற்கும் ஆதாரம் வைத்துள்ளேனா? என்றால் அடையாள அட்டை உள்ளது அது வீட்டில் உள்ளது. இந்த விபத்து சமயத்தில் என் தந்தைக்கு 60 வயது. என் தந்தைக்கு விபத்து சமயத்தில் 60 வயது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த காயச்சான்றிதழ், மருத்துவமனை விடுவிப்பு ஆகியவைகளில் உள்ள காயத்தை தவிர வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். என் தந்தை விபத்திற்கு பின் 2 வருடங்கள் கழித்து இறந்தார். என் தந்தை தொடர் சிகிச்சையில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். என் தந்தை தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த மருத்துவரசீதுகள் தவிர வேறு ரசீதுகள் இல்லை என்றால் சரிதான். என் தந்தைக்கு பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் என் தந்தையின் வருமானத்தை நம்பயிருந்தது பொய் எனவும், என் தந்தைதான் என் வருமானத்தை நம்பியிருந்தார் என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- நாகராஜ்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.